செய்தி வெளியீடு எண்:924 நாள்:–**30.10.2008**

**<u>நெல்லை மாவட்டம், தாமிரபரணி ஆற்றில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இறந்தமைக்காக இரண்டு லட்ச ரூபாய் குடும்பப் பாதுகாப்பு நிதி</u>**

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

**நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவியைச் சேர்ந்த அம்மையப்பன் என்பவரும் அவரது மகள்களாகிய கார்த்திகா, ராஜலட்சுமி ஆகிய இரண்டு குழந்தைகளும் அண்மையில் தாமிரபரணி ஆற்றைக் கடந்தபொழுது நீரில் மூழ்கி இறந்த செய்தி மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள் மூலமாக தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வேதனையடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இத்துயர சம்பவத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அம்மையப்பனின் மனைவி திருமதி ஆதிலட்சுமிக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், வறுமை நிலையில், கணவரையும், இரண்டு குழந்தைகளையும் இழந்து வாடும், ஆதிலட்சுமிக்கு குடும்பப் பாதுகாப்பு நிதியாக முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (30.10.2008) ஆணையிட்டுள்ளார்.**

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**